**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 31–ம் நாள்
2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 15–ம் நாள் செவ்வாய்க்கிழமை

******

**இடைமனு எண். 03/2025–ல் – அசல் வழக்கு எண். 131/2019**

1. A. தஷ்ணாமுர்த்தி
2. D. வினோத் (எ) ராமநாதன் .....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

...எதிராக...

1. B. விமலா
2. R. பாலகிருஷ்ணன் .... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–8 விதி 1A (3)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் எதிர்வாதி ஆவார். 1–ம் பிரதிவாதி தனது தந்தை ஆவார். அவருக்காகவும் சேர்த்து தான் இந்த அபிடவிட்டை

தாக்கல் செய்கிறேன். தனக்கு வழக்கு விபரம் நன்கு தெரியும். மேற்படி வழக்கில் தனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை இந்த அபிடவிட்டின் ஒரு பாகமாக கருதும்படியும், மேற்படி இத்துடன் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்க வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. எனவே இத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணப்பட்டியலில் கண்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்க கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரார்களின் மனுவானது சட்டப்படியும் நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இரு தரப்பு விசாரணைகளும் முடிக்கப்பட்டு வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் / எதிர்வாதிகள் தரப்பில் பெறப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கு விசாரணை துவங்கப்பட்ட பின்பு பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் வாதுரை பேச மற்றும் தீர்ப்புரைக்கு தயாரான நிலையில் இம்மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மேலும் இவ்வழக்கில் வழக்கிற்கு பிற்பாடு பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வாதுரைக்காக போடப்பட்டுள்ள வழக்கை அவசியம் இல்லாததால் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/எதிர்வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு,

வாதி மற்றும் எதிர்வாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் சில முக்கிய ஆவணங்கள் மனுதாரர்/2–ம் எதிர்வாதிக்கு கிடைக்கப்பட்டு அவைகளை மனுதாரர்/2–ம் எதிர்வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருதரப்பு விசாரணைகளும் முடிக்கப்பட்டு வாதுரைக்காக போடப்பட்டுள்ள நிலையில் வழக்கு விசாரணை துவங்கப்பட்ட பின்பு பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 15–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.03/2025–ல்
அசல் வழக்கு எண்.131/2019
நாள்.15.07.2025.